சென்னை—6, தொழிலாளர் இணை ஆணையர்—1 அவர்களின் செயல்முறைகள்.

பிறப்பிப்பவர் திரு. பா. மாதவன், எம்.ஏ.,பி.எல்.,

சுருக்கம்

பணிக்குழு — தொழிலாளர் துறை — தொழிலாளர் அமைச்சுப்பணி — திரு . சு. ஆனந்தபாஸ்கரன், இளநிலை உதவியாளர், தொழிலாளர் இணை ஆணையர்—1 அலுவலகம், சென்னை—6 — தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டது— 03.08.2020 முற்பகல் பணியில் சேர்ந்து கொண்டது — பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டது.

எண். அ4/2126/2020 நாள். 8.09.2021.

படிக்கப்பட்டது.

1. அரசாணை எண்.191 பொது துறை நாள்.01.12.1962
2. அரசாணை எண்.21 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் துறை, நாள்.23.01.1996.
3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம் எண் 2387/PSD-I/2020 நாள்.28.05.2020.
4. சென்னை—6, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறைகள் எண்.ஜி3/16386/2020—1 நாள்.29.07.2020.

ஆணை:

மேலே படிக்கப்பட்ட அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, பார்வை(3)இல் கண்டுள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நேரடி நியமனம் மூலம் இளநிலை உதவியாளர் [Junior Assistant] பதவிக்கு தேர்வு செய்து தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை(4)இல் கண்டுள்ள செயல்முறையின் வாயிலாக திரு . சு. ஆனந்தபாஸ்கரன் என்பவருக்கு சென்னை—6, தொழிலாளர் இணை ஆணையர்—1 அலுவலகத்திற்கு இளநிலை உதவியாளர் ஆக பணிநியமனம் மற்றும் பணியமர்த்தியும் ஆணைகள் வழங்கப்பட்டது.

தனியர், இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 03.08.2020 முற்பகல் முதல் தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 28(1)(2)ன்படி பணிவரன்முறை செய்து [Service Regularization] ஆணையிடப்படுகிறது. தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர்பணிக் காலத்தில் ஈராண்டு பணிக் காலத்தில் தகுதிகாண்பருவத்தில் வைத்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

தகுதிகாண்பருவக் காலத்தில் தனியர் பார்வை(4)இல் கண்டுள்ள செயல்முறையில் தெரிவிக்கப்பட்டவாறு கீழ்க்கண்ட தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

1. தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல்
2. பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி

மேற்படி வரையறுக்கப்பட்ட தேர்வுகளை பணிவரண்முறை நாள் முதல் ஐந்து ஆண்டு காலத்திற்குள் தேர்ச்சி பெறத் தவறும்பட்சத்தில், எவ்வித முன்னறவிப்பும் இன்றி இதே காரணத்திற்காக தனியர் அரசுப் பணியிலிருந்து நீக்கப்படுவார் என இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

மேலும், தனியரது பணிவரன்முறையானது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் 2018—2019 மற்றும் 2019—2020 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வுகள்—IVல் அடங்கிய தெரிவுகளுக்கெதிராக நிலுவையில் உள்ள ரிட்மனுக்களின் இறுதித் தீர்ப்பிற்குட்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தொழிலாளர் இணை ஆணையர் — 1,
சென்னை — 6.

8.9.21

பெறுநர்
திரு . சு. ஆனந்தபாஸ்கரன்,
இளநிலை உதவியாளர், இவ்வலுவலகம்.

நகல்: பணிப்பதிவேடு / இருப்புக்கோப்பு / உதிரி